NOOLAHAM
FOUNDATION

# எண்ணிம உட்கட்டமைப்பு (NAS device) நிறுவல்

## செயற்றிட்ட அறிக்கை 2019

noolahamfoundation.org

| | |
|---|---|
| செயற்றிட்ட தலைப்பு | Digital Infrastructure Setup |
| செயற்றிட்ட எண் | NF/PG/2019/0005 |
| செயற்றிட்ட இடம் | யாழ்ப்பாண அலுவலகம், இலங்கை; ரொறன்ரோ, கனடா |
| செயற்றிட்ட காலம் | 2019 |
| நிறைவேற்றும் அமைப்பு | நூலகம் நிறுவனம் |
| முக்கிய பங்குத்தாரர்கள் | ரொறன்ரோ, கனடா |

## செயற்றிட்டச் சுருக்கம்

நூலக எண்ணிப் பாதுகாப்புப் பணிகளை மேம்படுத்த யாழ்ப்பாண அலுவலகத்தில் Network-attached storage (NAS) கருவி நிறுவப்பட்டது. இதன் ஊடாக வன்தட்டுக்களில் படி எடுத்து பகிர்வது குறைக்கப்பட்டது, Remote ஆக நிர்வாகிப்பது சாத்தியமானது. இந்தப் பணியை நூலகம் கனடா தன்னார்வலர்களும் யாழ்ப்பண தன்னார்வலர்கள் மற்றும் பணியாளர்களும் நிறைவேற்றினார்கள்.

## இலக்குகளும் நோக்கங்களும்

மின்வருடப்பட்ட கோப்புக்களை சேமிக்க, சரிபார்க்க, செய்லாக்கம் செய்ய (process) தனித் தனியாக வன்தட்டுக்களில் படி (copy) எடுப்பது வழக்கமாக இருந்தது. இவ்வாறு தனித் தனியாக படி எடுப்பது நேர விரயமாக இருந்தது. மேலும், இந்தக் கோப்புக்களை Remote ஆக மேலாண்மை செய்வதும் இலகுவாக இருக்கவில்லை. இதற்கு ஓர் தீர்வாக Network-attached storage (NAS) நிறுவுவது இந்தச் செயற்திட்டத்தின் நோக்கம் ஆகும்.

## முக்கிய பங்குத்தாரர்கள்

இது நூலக நிறுவனத்தின் ஓர் உள்ளக செயற்திட்டம் ஆகும். எண்ணிமச் செயலக்க பணியாளர்கள் இதன் முதன்மை பங்குத்தாரர்கள். நூலகம் கனடா தன்னார்வலர்கள் இந்தச் செயற்திட்டத்தை நிறைவேற்றினர்.

## செயற்பாடுகள்

- நூலகத்தின் தேவைகளை அறிதல்
- பொருத்தமான NAS கருவியைத் தேர்தெடுத்தல், வாங்குதல்
- NAS கருவியை configure செய்தல்
- NAS கருவியையும், அதற்குத் தேவையான networking ஐயும் நூலக அலுவலகத்தில் நிறுவுதல்
- NAS drive ஐ கணினிகளில் உருவாக்கல்
- NAS கருவி பயன்பாடு தொடர்பான ஆவணம் உருவாக்கல், பயனாளர்களுக்குப் பயிற்சி வழங்கல்

**கால அட்டவணை**

இந்தச் செயற்திட்டம் யூன் 2019 காலப் பகுதியில் திட்டமிடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

**வரவுசெலவு**

நிதிப்பங்களிப்பு

- Noolaham Canada (Pon Bala, Vakees, Parthasarathy, Natkeeran)
- In kind donations - 200,000

செலவுகள்

- NAS Device, and 4 hard drives -1450
- NAS இற்கான மின்னிணைப்பு 28,000

**அடைவுகள்**

- ஆவணங்களை காப்புப்படி எடுப்பதில் வினைத்திறனோடு செயற்பட முடிந்தது.
- NAS (Network Access Storage) மற்றும் LAN (Local Area Network) இணைக்கப்பட்டமையால் ஆவணங்களுக்கான அணுக்கமும், ஆவணங்களை ஒரு கணனியிலிருந்து இன்னொரு கணனிக்கு மாற்றுவது இலகுவானதாகக் காணப்பட்டது.
- எண்ணிமப்படுத்திய ஆவணங்களை உரிய முறையில் சேமிக்கவும், சரிபார்க்கவும், இலகுவாக இருந்தது.
- தேவையற்ற ஆவணங்களை உடனுக்குடன் கணனி சேகரிப்பிலிருந்து நீக்க முடிந்தமையால் கணனியில் செயற்திறன் அளவு அதிகமாகக் காணப்பட்டது.

**எதிர்கொண்ட சவால்கள்**

- NAS சேமிப்பானின் அளவு குறைவு என்பதால் ஒவ்வொரு மாதமும் backup செய்து ஆவணங்களை அழிக்க வேண்டி ஏற்பட்டமை.

**கற்றல்களும் பரிந்துரைகளும்**


- பல்லூடக ஆவணங்களை சேகரிப்பது குறித்து கவனத்தில் எடுக்கப்படாமையால் கொள்ளளவு குறைந்த NAS பொருத்தப்பட்டது. இதனை நிவர்த்தி செய்வதற்கு தற்போதுள்ள NAS இணை இருமடங்கு அல்லது மும்மடங்காக அதிகரித்தல் வேண்டும்.
- NAS அணுக்கம் ஒரு பிரிவில் உள்ளவர்களுக்கு விரைவாகவும், மற்றொரு பிரிவில் உள்ளவர்களுக்கு மெதுவாகவும் இருந்தது. LAN Cable களின் NAS உடனான இணைப்பு முறையினை மாற்றியமைப்பதன் மூலம் இது சரிசெய்யப்பட்டது.
- NAS நிறுவப்பட்ட பின்பும் Remote முகாமைத்துவம் செய்யப்படும் வாய்ப்புக்கள் இன்னும் விரிவாக ஆராயப்படாமல் உள்ளன.

## தொடர்புடைய ஆவணங்கள்

Synology Disk Station 918 - NAS கருவியை பயன்படுத்த/முகாமைத்துவம் செய்யப் பயன்படக்கூடியத் தகவல்களைக் கொண்டிருக்கிறது.

## பின்னிணைப்பு

NAS வலைப்பின்னல் வரைபடம்:




## நூலக நிறுவனம்

நூலக நிறுவனமானது இலங்கைத் தமிழ் பேசும் சமூகங்களின் அறிவுத் தொகுதிகளையும் மரபுரிமைகளையும் ஆவணப்படுத்துவதில் ஈடுபட்டு வரும் ஒரு தன்னார்வத் தொண்டு நிறுவனமாகும். 2005 முதல் திறந்த, கூட்டுச் செயற்பாட்டை முன்னிறுத்திச் செயற்பட்டு வரும் நூலக நிறுவனம் இலங்கைத் தமிழ் பேசும் சமூகங்கள் தொடர்பான ஒரு முதன்மையான உசாத்துணைத் திரட்டினை உருவாக்கியுள்ளது. பல்வேறு செயற்றிட்டங்கள் மூலம் ஆவணப்படுத்தற் பணிகளை நூலக நிறுவனம் முன்னெடுத்து வருகிறது.